## கம்பம் நகராட்சி

**2018–ஆம் ஆண்டு மார்ச் மாதம் 23 ஆம் நாள் (23.03.2018) வெள்ளிக் கிழமை பிற்பகல் 04.00** மணிக்கு, கம்பம் நகர்மன்றக் கூட்ட அரங்கில் தனிஅலுவலர் தலைமையில் நடைபெறும் சாதாரணக் கூட்டம்.

### கூட்டப் பொருட்கள்

| | |
|---|---|
| **1.** | நகராட்சி ஆணையாளர் அவர்களின் 2/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது |
| | **அலுவலகக் குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம். |
| **2.** | நகராட்சி பொறியாளர் அவர்களின் 2/2018–ஆம் மாதத்திற்குரிய நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு**: மன்றம் பதிவு செய்யலாம். |
| **3.** | இந்நகராட்சிக்கு சொந்தமான உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பையின் அளவு கணக்கெடுப்பு செய்யப்பட்டதில் மொத்தம் **54600** cu.m அளவு குப்பை சேகரமாகி உள்ளது அறியப்பட்டுள்ளது. சென்னை நகராட்சி நிர்வாக ஆணையரக தலைமைப் பொறியாளர் அவர்களின் தலைமையில் 21.02.2018–ஆம் தேதியில் நடைபெற்ற கூட்ட நடவடிக்கைகளில் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் அகற்றிட ஒரு cu.m-க்கு ரூ.639.40 விலை நிர்ணயம் (Including GST) செய்யப்பட்டுள்ளது. மேற்படி விலை விகிதம் அடிப்படையில் உரக்கிடங்கில் சேகரமாகியுள்ள குப்பைகளை Biomining முறையில் அகற்றிட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.380.00 இலட்சத்திற்கு தயார் செய்யப்பட்டுள்ளது. திடக்கழிவு மேலாண்மை திட்ட நிதியின் கீழ் பணிகள் மேற்கொள்ளவும், விரிவான திட்ட மதிப்பீட்டிற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு** – 1) விரிவான திட்ட மதிப்பீட்டிற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2) தூய்மை இந்தியா திட்டம் – திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்து தரகோரி நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்றம் அனுமதி வழங்கலாம். |
| **4.** | சென்னை, நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் கடித எண்.13277/2017/WS1, நாள்.18.12.2017–ன்படி இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட மேல்நிலை நீர்தேக்க தொட்டியின் விபரங்கள், குடிநீர் விநியோக பகுதிகள், பகிர்மான குழாய் மற்றும் சுலிஸ் வால்வு ஆகிய விபரங்களை Zonation Map–ல் Auto Cadd மூலம் வரைபடங்கள் தயார் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.5000/–ற்கு மன்ற அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு –** மன்றம் அனுமதிக்கலாம். |

| | |
|---|---|
| 5. | துணை இயக்குநர், சுகாதாரப்பணிகள் தேனி அவர்களின் கடித ந.க.எண்.7507/அ2/2017, நாள்:.03.2018–இன்படி கம்பம் நகர் பகுதிகளில் தீவிர போலியோ சொட்டு மருந்து முகாம் 0–5 வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்கு 11.03.2018 அன்று இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 25 மையங்களில் நடைபெறவுள்ளது. அவ்வாறன நிகழ்வுகளுக்கு நகராட்சி பகுதிகளில் ஒலிபெருக்கி மூலம் விளம்பரம் செய்யவும், பேருந்து நிலையத்தில் பந்தல் அமைத்து போலியோ சொட்டு மருந்து கொடுக்கவும் ஆகும் செலவினத் தொகை ரூ.16,000/–ஐ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலகக் குறிப்பு**: 1) மன்றம் பதிவு செய்யலாம். 2)போலியோ சொட்டு மருந்து முகாம் சிறப்பாக நடத்தி பொது நிதியிலிருந்து செலவினம் மேற்கொண்டதைமன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.02/2018/எச்1) |
| 6. | திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின்படி, கம்பம் நகராட்சி பகுதியில் குடியிருப்பு பகுதி, வணிக நிறுவனப் பகுதி மற்றும் உரக்கிடங்கு ஆகியவற்றில் குப்பை மாதிரிகளை எடுத்து Green Link Analytical and Research Laboratory India Private Limited, Coimbatore நிறுவனம் மூலம் குப்பை கழிவுகளை மாதிரி ( Sample ) எடுத்து பகுப்பாய்வு செய்து ஆய்வு அறிக்கை ( Lab Report) பெறுவதற்கு ஆகும் உத்தேச செலவினம் ரூ.8000/–க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது, |
| | **அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.3136/2015/எச்1) |
| 7. | கம்பம் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் TN 60 T 4524 டம்பர் பிளேசர் லாரிக்கு 28.03.2018 உடன் தகுதிச்சான்று முடிவடைவதால், மராமத்து பணிகள் செய்து புதிதாக தகுதிச்சான்று பெறுவதற்கு உத்தேச செலவினம் ரூ.1,10,000/–ஐ (ரூபாய் ஒரு இலட்சத்து பத்தாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.791/2018/எச்1) |
| 8. | இந்நகராட்சிக்கு பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் வாகனம் எண். TN 60 T 4524- டம்பர் பிளேசர் லாரிக்கு டயர்கள் தேய்ந்துவிட்டதால், மேற்படி வாகனத்திற்கு 7x50/16 சைஸ் அப்பலோ (Appollo) கம்பெனி பட்டன் டயர்கள் நான்கும் புதியதும், ரன்னிங் டயர் இரண்டும், ஆறு புதிய டியூப் மற்றும் ஆறு பிளாப்களை புதியது வாங்கி வண்டியில் மாட்டி பொருத்தி தருவதற்கு ஆகும் உத்தேச செலவீனத் தொகை ரூ.90,000/-ஐ (ரூபாய் தொண்ணூராயிரம் மட்டும்) மன்றத்தின்அனுமதிக்குவைக்கப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.790/2018/எச்1) |

| | |
|---|---|
| 9. | கம்பம் நகராட்சிக்குட்பட்ட வார்டு 26, குளத்து தெருவில், கதவு எண்.8–ல் குடியிருக்கும் திரு.இளங்கோ என்பவர் பாதை சம்மந்தமாக உத்தமபாளையம், மாவட்ட உரிமையியல் நீதிமன்றத்தில் தொடரப்பட்ட வழக்கு ஓ.எஸ்.எண்.99/2011 வாதிக்கு சாதகமாக 23.12.2016–ஆம் தேதி தீர்ப்புரை வரப்பெற்றது. மேற்படி வழக்கினை மேல்முறையீடு செய்வதற்கு அரசு வழக்கறிஞர் திரு.ஆர்.ஏ.காந்தன் அவர்கள் இவ்வழக்கிற்கு ஏற்படும் செலவினத் தொகை ரூ.7500/–ஐ வழங்குமாறு கோரியுள்ளதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |
| | **அலுவலக குறிப்பு** – மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1257/2011/எப்1) |
| 10. | இந்நகராட்சிக்குச் சொந்தமான டம்பர் பிளேசர் வாகனம் TN 60 T 4504-டம்பர் பிளேசர் லாரிக்கு கிளர்ச் பிளேட், கவர் அசெம்பிள், ரிலீஸ் பேரிங் மற்றும் அசெம்பிளி சிளர்ச்சி கிட் மேல்கிட், கீழ்கிட் பழுதினை சரிசெய்வதற்கு **28.**02.2018–ஆம் நாள் வரப்பெற்ற கீழ்க்கண்ட இரண்டு விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது. |

| வ.எண் | விலைப்புள்ளிதாரர் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ. |
|---|---|---|
| 1 | திரு பி.முருகன்,<br>ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ்,<br>நகராட்சி அலுவலகம் முன்பு,<br>கம்பம். | 28,500 |
| 2 | திரு டி.குருசாமி<br>ஓம் சக்தி ஆட்டோமொபைல்ஸ்,<br>கம்பம். | 31,000 |

| | |
|---|---|
| | **அலுவலக குறிப்பு** – வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள திரு பி.முருகன், ஸ்ரீ முருகன் ஆட்டோ எலெக்ட்ரிக்கல்ஸ், கம்பத்தின் விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.385/2018/எச்1) |
| 11. | இந்நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இருந்து சேகரமாகும் குப்பைகள் அனைத்தும் இந்நகராட்சிக்குச் சொந்தாமான கம்பம்–கூடலூார் மெயின் ரோட்டில் அமைந்துள்ள புதிய உரக்கிடங்கில் குப்பை கழிவுகள் தேங்கி மேடாகி வருகிறது.. மேற்படி உரக்கிடங்கில் Processing Unit, Machine மற்றும் அதற்குரிய கூரை (Roof) அமைக்கப்பட்டு உள்ளதால், நகராட்சி வாகனங்கள் குப்பை கழிவுகளை உள்ளே சென்று கொட்டுவதற்கு இடவசதி பற்றாக்குறையாக உள்ளதாலும், ஒரே இடங்களில் மறுபடியும் கொட்டுவதாலும் குப்பை கழிவுகள் தேக்கம் ஏற்படுகிறது. எனவே மேற்காணும் உரக்கிடங்கில் தேவைப்படும் நேரங்களில் ஜேசிபி மற்றும் கிட்டாட்சி (HITACHI) மூலம் குப்பை கழிவுகளை ஒதுக்கி சமப்படுத்தும் பணிகளை மேற்கொள்வதற்கு,**28.02.2018** அன்று |

| | |
|---|---|
| | விலைப்புள்ளிகள் கோரியதற்கு கீழ்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பட்டதை மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. |

| வ. எண். | விலைப்புள்ளிதாரரின் பெயர் மற்றும் முகவரி | விலை விகிதம் ரூ. | |
|---|---|---|---|
| | | ஒரு மணி நேரத்திற்கு | |
| **1.** | திரு தங்கராஜ்<br>TASK எர்த் மூவர்ஸ்,<br>**33.**எல்,.எப்.ரோடு, கம்பம். | கிட்டாட்சி<br>ஜேசிபி | **1200/–**<br>**750/–** |
| **2.** | திரு ரஞ்சித்<br>ஜெம் ஜோசப் எர்த் மூவர்ஸ்<br>காந்தி சிலை அருகில்,<br>வரதராஜபுரம், கம்பம் | கிட்டாட்சி<br>ஜேசிபி | **1500/–**<br>**900/–** |

**அலுவலக குறிப்பு** – வரப்பட்ட இரண்டு விலைப்புள்ளிகளில் TASK எர்த் மூவர்ஸ், கொடுத்துள்ள குறைந்தபட்ச விலைப்புள்ளியை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.**482/2018/**எச்**1**)

**12.** இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரை உள்ள வார்டுகளில் குடியிருப்பு மற்றும் குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கு குடிநீர் குழாய் இணைப்பு வழங்க குடிநீர் துணை விதிகளில் பாகம்–1 பிரிவு–1(அ)–ல் தெரிவிக்கப்பட்டுள்ள நடைமுறை விதிகளின்படி 5 சதவீதம் உயர்வு செய்து 2018–19ம் ஆண்டிற்கு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள சாலை சேதாரக் கட்டணத்திற்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | நீளம் | ஜல்லி | | தார்சாலை | | சிமெண்ட்சாலை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | **2017–18** | **2018–19** | **2017–18** | **2018–19** | **2017–18** | **2018–19** |
| 1 | 0 முதல் 30 மீ வரை | ரூ.1577/– | ரூ.1656/– | ரூ. 3347/– | ரூ. 3514/– | ரூ.3859/– | ரூ.4052/– |
| 2 | 30 முதல் 90 மீ வரை | ரூ. 2470/– | ரூ. 2594/– | ரூ. 4229/– | ரூ. 4440/– | ரூ. 4736/– | ரூ. 4973/– |

**அலுவலககுறிப்பு–** மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்.1288/2018/இ2)

| | |
|---|---|
| **13.** | இந்நகராட்சிக்கு சொந்தமான காந்திநகர் குடிநீர் மேல்நிலைத் தொட்டி, நந்தபோபாலன் குடிநீர் மேல்நிலைத்தொட்டி, வடக்குப்பட்டி குடிநீர் மேல்நிலைத் தொட்டி, வாரச்சந்தை குடிநீர் மேல்நிலைத் தொட்டி மற்றும் எல்.எப்.ரோடு மேல்நிலைத் தொட்டியில் சேகரிக்கப்படும் குடிநீர் வார்டு எண்.1 முதல் 33 வரை பொதுமக்களுக்கு விநியோகம் செய்யப்படுகிறது. அவ்வாறு விநியோகம் செய்யப்படும் குடிநீர் மாதரி எடுத்து மாதம்தோறும் மேற்கண்ட குடிநீர் தேக்க தொட்டிகளிலிருந்து சேகரித்து மாவட்ட குடிநீர் பரிசோதனை மையம், மதுரை சென்று பரிசோதனைகள் செய்து சான்றுகள் பெறுவதற்கு ஆகும் ஆண்டு செலவு ரூ.50000/–க்கு (ரூபாய் ஐம்பதினாயிரம் மட்டும்) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. |
| | **அலுவலககுறிப்பு–** 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>2) மேற்படி பணிக்கான செலவினத்தினை 2018–19ஆம் ஆண்டு குடிநீர் திட்ட நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். (ந.எண்.1096/2018/இ2) |

**ஒப்பம்/– திரு ந.சங்கரன்,**
ஆணையாளர் மற்றும் தனிஅதிகாரி,
கம்பம் நகராட்சி.

நாள்.**23.03.2018**
இடம். கம்பம்